**STC No. 867/2016** தேதி **: 24,03,2026**

<u>ம.சா.**1** திரு. ராஜ்குமார் த/பெ. செல்வராஜ் நீதிமன்ற ஊழியரால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு **3** வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. 7 up பாட்டிலில் எம்.ஆர்.பி. குறிப்பிடப்படவில்லை. எதன் அடிப்படையில் ரூபாய். 15 ரொக்கமாக கொடுக்கப்பட்டு உணவு மாதிரி பெறப்பட்டது. விற்பனையாளர் தெரிவித்ததன் அடிப்படையில் விலை கொடுத்து வாங்கப்பட்டது. 7 up பாட்டிலின் சந்தை விலை எம்.ஆர்.பி. ரூபாய் 8 என்பது தெரியுமா என்றால் தெரியாது. தஞ்சாவூர் உணவு பகுப்பாய்வு கூடம் NABL Accredited Lab– மாதிரி எடுக்கப்பட்ட உணவை பகுப்பாய்வு செய்வாற்கு அங்கீகரிக்கப்பட்ட பகுப்பாய் கூடம் என்பதற்கு இந்த வழக்கில் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அந்த ஆவணம் கட்டாயம் இல்லை. மேலும் மேற்படி தேதியில் தமிழகத்தில் உள்ள அனைத்து FAL (Food Analytical Lab) உணவு பகுப்பாய்வு மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு பெறப்பட்ட ஆய்வின் அடிப்படையில் வழக்கு தொடரப்பட்டு அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அந்த சமயத்தில் தேவைப்படவில்லை என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை. NABL Accredtion கட்டாயம் தேவை என்றாலும் இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 04.08.2016 அன்று பாண்டியன் ரெசிடென்சி ஹோட்டல் பாரில் தகவலின் பெயரில் ஆய்வு செய்யப்பட்டதா என்றால் அந்த சமயத்தில் அந்த பகுதியில் உள்ள அனைத்து ஹோட்டல்களிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

2. இந்த உணவு மாதிரி surveillance மாதிரியாக எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. சட்டப்பூர்வ உணவு மாதிரியாக எடுக்கப்பட்டது. பாண்டியன் ரெசிடென்சி ஹோட்டலில் வேறு எந்த மாதிரியான உணவுகள் வைக்கப்பட்டது என்றால் வாட்டர் பாட்டில் மற்றும் குளிர்பானங்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தது. சுமார் 40க்கும் மேற்பட்ட குளிர்பானங்கள் இருந்தனவா என்றால் சரிதான். மேற்படி 40 குளிர்பான பாட்டிலிகளிலிருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டதாக என்றால் 40 பாட்டில்களில் இருந்து 1 பாட்டிலில் கண்ணால் பார்க்ககூடிய திட பொருள் இருந்ததால் அந்த பாட்டில் மட்டும் தான் மாதிரி எடுக்கப்பட்டது. படிவம் பி முழுவதுமாக படித்து தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். அந்த படிவம் பி ல் Lot/Code/Batch No. என்ன கூறியுள்ளது என்றால் Printed but not clear என்று அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக எந்தா Batch No. உணவு தயாரிப்பு வரிசை எண் குறிப்பிடப்படாததால் உணவு தயாரிப்பாளர் மேல்முறையீடு செய்யும் வாய்ப்பை இழந்துவிட்டார் என்றால் சரிதான். வரிசை எண் பகுப்பாய் அறிக்கையில் தெளிவாக குறிப்பிடவில்லை. பிரிவு 47(1)(b) உணவு பாதுகாப்பு

சட்டப்படி ஒரே ஒரு மாதிரி எடுக்கப்பட்டதால் மேல்முறையீடு செய்ய வாய்ப்பு கொடுக்க இயலவில்லை.

3. மேற்படி இவ்வழக்கில் எடுக்கப்பட்ட மாதிரி உணவு தயாரிப்பாளரின் அசல் தயாரிப்பா அல்லது போலியான தயாரிப்பா என்று குறிப்பிடப்படவில்லை என்றால் அதுகுறித்த விவரம் இல்லை. அசல் உணவு மாதிரிகளில் உணவு தயாரிப்பின் விலை மற்றும் தயாரிப்பு வரிசை எண் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் மேற்படி உணவு மாதிரியில் தெளிவாக தெரியவில்லை. மேற்படி அசல் உணவு மாதிரியில் தெளிவாக இல்லாத காரணத்தால் அது போலி தயாரிப்பு என்றால் சரியல்ல. உணவு தயாரிப்பு சட்டத்தில் எம்.ஆர்.பி. அல்லது வரிசை எண் அல்லது ingredients போன்றவைகள் கட்டாயம் குறிப்பிடபடவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு குறிப்பிடப்படவில்லை என்றால் உணவு பாதுகாப்பு அதிகாரிக்கு நடவடிக்கை எடுக்க அதிகாரம் உண்டு என்றால் சரிதான். ஆனால்இவ்வழக்கில் அவ்வாறு எம்.ஆர்.பி. மற்றும் வரிசை எண். சரியாக பிரிண்ட் செய்யப்படாதது குறித்து ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. உணவு பகுப்பாய்வு அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். அந்த அறிக்கையில் unsafe என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர மனித உடலுக்கு தீங்கானது என்று குறிப்பிடவில்லை என்றால் உணவு பாதுகாப்பு சட்டம் பிரிவு 59(1) ன் படி Unsafe என்றால் மனிதர்கள் உட்கொள்ள கூடாத உணவு என்றுதான் பொருள்படும்.

4. இவ்வழக்கில் அவ்வாறு கொடுக்கப்பட்ட உணவு பகுப்பாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் தெளிவுபடுத்தவில்லை. நான் சொன்ன பிரிவு இவ்வழக்கிற்கு பொருந்தாது என்றால் சரியல்ல. சோதனையின் அந்த இடத்திலே சாட்சி சிவாஜிராவிடம் கையெழுத்து வாங்கப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு கணக்கு காண்பிப்பதற்காக மேலும் தஞ்சாவூர் பகுப்பாய்வு கூடம் NABL அங்கீகரிக்கப்பட்ட பகுப்பாய்வு கூடம் என்று ஆவணம் எதுவும் தாக்கல் செய்யாததால் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

<u>2வது எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. திடபொருள் உள்ளதாக சொல்லப்பட்டுள்ள சுமார் 40 பாட்டில்களில் சரியாக நான் மாதிரிக்கு எடுத்த பாட்டிலில் கண்டுபிடிக்க முடியாது என்றால் கண்ணால் பார்க்க கூடிய அளவில் இருந்ததால் உணவு மாதிரி அந்த பாட்டிலில் எடுக்கப்பட்டது. 40 பாட்டில்களும் ஒரே crate ல் இருந்ததா என்றால் அவ்வாறு தான் இருந்தது. மேற்படி மாதிரி பாட்டிலை நான் மேற்சொன்ன கடையிலிருந்து எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சாட்சிகள் மேற்சொன்ன இடத்தில் என்றால் சரியல்ல. அந்த 40 பாட்டில்களில் காலாவதியான பாட்டில்கலும் இருக்கும் என்றால் இல்லை. நான் அந்த 40 பாட்டில்களையும் ஆய்வு செய்தேன் என்றால் சரிதான். ம.சா.ஆ. 5 விற்பனையாளர் அவரால் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ. 5 நான் கூறியவாறு விற்பனையாளர் அவர்களால்

கொடுக்கப்படவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.5 எங்கள் அலுவலகத்தில் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. அதில் கையொப்பமிட்ட சாட்சிகளும் எங்கள் அலுவலகத்தில் தான் கையெழுத்து செய்தார்கள் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.3 படிவம் 5A எங்கள் அலுவலகத்தில் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.3 ல் கையொப்பமிட்ட ம.சா.2 நான் கையெழுத்து செய்த அதே மையினால் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். ம.சா.ஆ.4 ரசீதானது போலியானது என்றால் சரியல்ல. அந்த ரசீல் காட்டப்பட்டுள்ள பணமானது மாறுபட்டுள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.4 ல் உள்ள சாட்சி கையெழுத்து எங்கள் அலுவலகத்தில் வைத்து செய்தார்கள் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.8 எடுக்கப்பட்ட மாதிரிகளில் ஒருபகுதி தான் பகுப்பாய்விற்கு படிவம் 6மூலமாக அனுப்பப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மீதமுள்ள 3/4 மாதிரிகள் படிவம் 6 மூலமாக பாதுகாப்பிற்காக அனுப்பிவைக்கப்பட்டது என்றால் சரிதான். நான் முன் விசாரணையில் சொலிலியுள்ளவாறு NABL Accredited Lab இல்லை என்றால் சரியல்ல. மாதிரி எடுத்ததற்கான தகவல் 2வது எதிர்மனுதாரருக்கு கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.10 கடிதமானது உணவு பாதுகாப்பு அலுவலரான எனக்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான்.

2. ம.சா.ஆ.10 ஆவணம் பக்கம் 2ல் NABL Accredited Lab இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. NABL Accredited Lab ஆனது உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டத்தின் படி Notified ஆய்வகம் இல்லை என்று ம.சா.ஆ.10 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.13 இவ்வழக்கிற்கு சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.15ல் பகுப்பாய்வு அறிக்கையில் அதில் முடிவானது No Growth per Mill Litre என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2வது எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. 2வது எதிரி இப்பகுதியை சேர்ந்தவர் அல்லா என்றாலும் அவர் துபாயில் தொழில் செய்து வருகிறார் என்றால் தெரியாது.

**<u>1வது எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

கைப்பற்றப்பட்ட தடய பொருளை 1வது எதிர்மனுதாரர் எந்த தேதியில் 2வது எதிர்மனுதாரரிடமிருந்து வாங்கினார் என்பது தொடர்பாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் பாரில் விற்பனை செய்யப்படும் பொருள்கள் அங்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு பரிமாரப்படும் என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட குளிர்பானம் 1வது எதிர்மனுதாரர் வாடிக்கையாளர்களுக்கு குளிர்பானமாக தான் விற்கப்படும். விற்பனைக்கு பிறகு காலியான பாட்டில்கள் வினியோகஸ்தர்களுக்கு அனுப்பப்படும் என்றால் சரிதான். வினியோகஸ்தர்கள் அதன் உற்பத்தியாளர்களுக்கு அனுப்பி வைப்பார்கள் என்றால் சரிதான். 1வது எதிர்மனுதாரரிமிருந்து கைப்பற்றப்பட்ட பொருளை நான்

பாட்டிலுடன் வாங்கியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. பாட்டில் 1வது எதிர்மனுதாரருக்கு உரியது அல்ல என்றால் சரியல்ல. பாரில் விற்கப்படும் பொருள்களுக்கு GST வரி விதிக்கப்படுவது உண்டா என்றால் அது குறித்த விவரம் எனக்கு தெரியாது. 1வது எதிர்மனுதாரர் பாரில் பொருள்கள் ரசீதுடன் விற்கப்படுமா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. ம.சா.ஆ.4 ரசீதானது எங்களால் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வாங்கப்படும் பொருள்களுக்கு விற்பனையாளர் ரசீதில் வாங்காமல் எங்களது ரசீதில் வாங்கியதற்கான காரணம் உண்டா என்றால் அந்த சமயத்தில் அவர்கள் ரசீது இல்லை என்று சொன்னதால் எங்கள் ரசீதில் பொருள் வாங்கப்பட்டது. நான் மேற்சொன்னவாறு 1வது எதிர்மனுதாரர் பாரில் இருந்து எந்த பொருளும் ரசீது மூலமாக வாங்கப்படவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.4 ஆனது வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதில் 1வது எதிர்மனுதாரர் கையொப்பம் செய்தார் என்று கூறினால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T.**கனிமொழி**., L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.